Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 24

சனிக்கிழமை
20 டிசெம்பர் 2025

மார்கழி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**மஹேலவின் பெயரில் மோசடி விளம்பரங்கள்**

விரிவு பக்கம்:-02



இலங்கையின்

## போர்க்குற்றவாளிகள் மீது தடை தொடரும்

### பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் உறுதி

**கொழும்பு, டிசெம்பர் 20**

**இலங்கையின் போர்க்குற்றவாளிகள் மீது, பிரிட்டன் விதித்துள்ள தடைகள் தொடரும் என்று பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் ஜெவட் கூப்பர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

»11

## டித்வா ஏற்படுத்திய அழிவு; நாளைமறுதினம் அறிக்கை!

### ஜனாதிபதி அநுரகுமாரவிடம் கையளிக்கிறது உலகவங்கி

கொழும்பு, டிசெ. 20
டித்வா புயலால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில், நாளைமறுதினம் தி ங்கட்கிழமை உலக வங்கியின் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்

»11

புலோலியில்

## வீடொன்றில் பதுக்கப்பட்ட 182 கிலோ கஞ்சா மீட்பு!

### சந்தேகநபரொருவர் கைது



விரிவு பக்கம்:-11

## நாட்டில் விரைவில் பஞ்சம்

கொழும்பு, டிசெ. 20
இலங்கையில் தற்போது உள்ள பேரிடர் நிலையால், பஞ்சம் தோன்றும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார எச்ச

»11

யாழ். உள்ளக விளையாட்டரங்கு வழக்கில்

## தவறான சமர்ப்பணத்தால் பெறப்பட்டது கட்டாணை!

### அதை நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை
### யாழ்.மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக அரங்கை அமைப்பதற்காகப் பெறப்பட்ட கட்டாணை, வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாய தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாது, தவறான எடுத்துரைப்புகளால் பெறப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாணம்

»11

## 500 பில்லியன் ரூபா குறைநிரப்புப் பிரேரணை; நாடாளுமன்று அனுமதி!

### ஏகமனதாக ஆதரவு

கொழும்பு, டிசெ. 20
500 பில்லியன் ரூபா குறைநிரப்புப் பிரேரணைக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.
டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து நாட்டை மீட்பதற்காக, 500 பில்லியன் ரூபா குறைநிரப்புப்

»11



## கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பப்பெண் கொலை!

### ஈச்சங்குளத்தில் கோரம்
### கணவன் கைது

வவுனியா, டிசெ. 20
வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஈச்

»11

## ரணிலுடன் இணைந்து பயணிக்கவே விருப்பம்

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சுஜித் சஞ்ஜய பெரேரா தெரிவிப்பு

விரிவு பக்கம்:-12

**புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் நீக்கம்!**

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

விரிவு பக்கம்:-02



முச்சந்தி முரளி

'அந்தாளுக்கு ஆமைக்கறியெண்டால் தெரியும். அரசியலமைப்பை பற்றி தெரியுமோ?'

## தமிழக எதிர்க்கட்சித் தலைவருடன் தமிழ்த் தேசியப் பேரவை சந்திப்பு!

### சீமானுடனும் பேச்சுவார்த்தை



சென்னை, டிசெ. 20
இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்படும் அரசியலமைப்புத் தொடர்பில் தலையிடுமாறு, தமிழக எதிர்க்

»11



## பேராசிரியர்களாக மூவர் பதவியுயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ நிபுணர் ஒருவரும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக, சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையா

»11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4290 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 40 55 68 80 |
| விசே. எழுத்து | X |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1357 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 13 17 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0316 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 1 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2396 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 03 11 15 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6048 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 5 5 2 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2078 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 17 19 50 62 |
| விசேட எழுத்து | K |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0164 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 21 25 41 |

# புதிய அரசமைப்பின் ஊடாகவே நிறைவேற்று அதிகாரம் நீக்கம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.20**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும். புதிய அரசமைப்பு ஊடாக அதற்குரிய நடவடிக்கை இடம்பெறும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் கேள்விகளை எழுப்பி இருந்தார். அந்தக் கேள்விகளுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் நேற்றுப் பதில்களை வழங்கினார்.

அவர் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசமைப்புத் தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே நடவடிக்கை இடம்பெறும். அரசமைப்பு வரைவுநகல் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டு, தேவையான திருத்தங்கள் சகிதம் சர்வஜன வாக்கெடுப்புடனேயே அதுநிறைவேற்றப்படும். அரசமைப்பு தொடர்பில் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் தொடர்பில் ஆராயப்படுகின்றன. உரிய மதிப்பீடுகளின் பின்னர் உத்தேச வரைவுநகல் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். புதிய அரசமைப்பு ஊடாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் நடவடிக்கை தொடர்பில் தற்போது மதிப்பீடு செய்யப்படுகின்றது-என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0756 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 7 2 3 4 1 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3022 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 03 12 35 45 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 04 19 40 67 |
| வெற்றி வாரம் | 5183 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0852 |
| வெற்றி இலக்கம் | 03 07 19 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கம் | 15 16 43 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4734 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கம் | 01 35 42 56 |
| வெற்றி வாரம் | 2198 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 19.12.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 27 36 50 61 |
| வெற்றி வாரம் | 2848 |

# ருக்ஷன் பெல்லன பணி இடைநீக்கம்

கொழும்பு, டிசெ.20

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லனவை உடனடியாகப் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரதிப் பணிப்பாளருக்கு எதிரான முதற்கட்ட விசாரணையில் பொறுப்பான பதவியில் அரச மருத்துவ அதிகாரியாக இருந்த ருக்ஷன் பெல்லன முன் அனுமதி இன்றி ஊடகங்களுக்கு அறிக்கைகள் வெளியிட்டமை தெரியவந்துள்ளது என்று சுகாதார அமைச்சின் கடிதத் தலைப்பில் வெளியான கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கைகள் பொதுமக்களிடையே சர்ச்சையையும், அமைதியின்மையையும் உருவாக்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக உரிய நேரத்தில் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# ருக்ஷன் பெல்லனவை பணிநீக்கியமை அநீதி

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன பணி இடைநீக்கம் செய்யப்பட்டமை அநீதியானது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசியலமைப்பு இயற்றப்படும்போது கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் அவசியம். ஏனெனில் மருந்து மாபியா உட்பட சுகாதார சேவையில் நிலவும் ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தும் மருத்துவர் ருக்ஷன் பெல்லன பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கினார் என்பதற்காகவே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதை ஏற்க முடியாது. தரம் குறைவான மருந்து மற்றும் சுகாதாரத்துறையில் நடக்கும் ஊழல், மோசடிகள் தொடர்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் அவருக்கு இல்லையா?

தரம் குறைவான ஊசிப் பயன்பாட்டால் இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் வாழும் உரிமை பறிபோய் உள்ளது. இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?-என்றார். இதற்குப் பதிலளித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இரு மரணங்கள் தொடர்பில் கவலை அடைகின்றோம். அது தொடர்பில் விசாரணை நடக்கின்றது. விசாரணை அறிக்கை வெளிவந்த பின்னரே மேலதிக தகவல்கள் தெரியவரும்-என்றார். (எ-44)

# தரமற்ற திரவ உரம் வவுனியாவில் அழிப்பு!

வவுனியா,டிசெ.20



விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவிருந்த 5 ஆயிரத்து 500 லீற்றர் தரமற்ற மற்றும் பயன்படுத்த முடியாத திரவ உரம் வவுனியா நீதவான் நீதிமன்றின் உத்தரவில் கடந்த புதன்கிழமை அழிக்கப்பட்டது. அரச புலனாய்வுத்துறைக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், வவுனியா இரட்டைப் பெரியகுளம் பகுதியில் குறித்த திரவ உரம் கடந்த வருடம் கைப்பற்றப்பட்டது. இரு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர். தேசிய உரச் செயலகம் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்து, வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தன. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில், திரவ உரத்தை அழிக்க உத்தரவிடப்பட்டது.

(க-110)

# மஹேலவைப் பயன்படுத்தி மோசடி விளம்பரங்கள்



கொழும்பு, டிசெ.20

நிதித் திட்டங்களை ஆதரிப்பது போன்று தனது உருவத்தைப் பயன்படுத்தி செயற்கை நுண்ணறிவு (AI) மூலமாக உருவாக்கப்பட்ட போலியான விளம்பரக் காணொலி தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன பொது எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த விளம்பரங்கள் முற்றிலும் போலியானவை என்றும் இதுபோன்ற மோசடிகளுக்கு பொதுமக்கள் பலியாகவேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிச்சீரமைப்பில் முறைகேடு சாந்தை மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ.20

**மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிச் சீரமைப்புகளில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து, சாந்தைப்பகுதி மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இதுதொடர்பாகத் தெரிவித்ததாவது- ஜே/148 கிராம சேவகர் பிரிவில் உள்ள வைரவர் வீதியைப் புனரமைப்பதற்கு, ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. எனினும் புனரமைப்புக்காக கேள்வி விண்ணப்பம் கோரப்படாமல் ஒரு தரப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதற்காக நாங்கள் வீதி ஓரத்தில் உள்ள மரங்களையும்வெட்டிபுனரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். ஆனால் வீதிக்குத் தரமான அடித்தளம் இடப்படாது, தரமற்ற வகையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன.

இதுதொடர்பாக நாங்கள் பிரதேசசபைத் தவிசாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்ததாரர் ஆகியோரிடம் முறையிட்டோம். அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களைக் கூறினர். பின்னர் ஓரளவு தரமான நிலையில் வீதிக்கு அடித்தளம் இடப்பட்டது. இருப்பினும் அதுவும் திருப்திகரமாக இல்லை.

வீதி முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படாமல், மூலப்பொருள்கள் வேறு ஒரு வீதிக்கு, எமது அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்டு, அங்கு புனரமைப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதைக் கண்டித்து, வைரவர் வீதியை முழுமையாகப் புனரமைக்குமாறு கோரினோம். சம்பவ இடத்துக்கு வருகை தந்த தவிசாளர், தங்கள் மீது பிழை இருப்பதை ஒப்புக்கொண்டார். மற்றைய வீதியில் பரவப்பட்ட மூலப்பொருள்களை எடுத்துவந்து வைரவர் வீதியில் பரவுமாறு ஊர் மக்களாகிய எங்களிடம் கூறினார். அவர்கள் விட்ட தவறுக்கு நாங்கள் அந்தவேலையைச் செய்யத் தேவையில்லை, இருப்பினும் நாங்கள் அதையும் செய்வதாகக் கூறினோம். எனினும் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதுதொடர்பாகப் பிரதேசசபை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றனர். (க-27)

## நிவாரணத்தில் பாரபட்சம் பொதுமக்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கலில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். டித்வா புயல் மற்றும் தொடர் மழையால் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களில் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெறுவோர் உட்பட நாளாந்தம் கூலித் தொழில் செய்யும் குடும்பங்களும் உள்ளன. அரச உத்தியோகத்தர்கள் பலரது வீட்டுவளவுகளில் வெள்ளம் தேங்கியிருந்தமையால், அவர்கள் பாடசாலைகளில் தங்கியிருந்தனர். ஆனால் இந்தக் குடும்பங்களுக்கு நிவாரணப்பொருள்கள் வழங்கப்படவில்லை. அதிகாரிகள் பாரபட்சம் காட்டாது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் உதவிகள் வழங்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-131)

## பண்டிகைக்கால வியாபார முன்னாயத்தம் மன்னாரில்

மன்னார், டிசெ.20

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், வழமைபோன்று பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வியாபார நிலையங்களை அமைப்பதற்கான கேள்வி கோரல் மற்றும்விண்ணப்பங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் மன்னார் நகரசபையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நத்தார் மற்றும் புதுவருட பண்டிகையை முன்னிட்டு, நடைபாதை பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அமைக்கப்படும்.

2025ஆம் ஆண்டுக்கான பண்டிகைக் கால வியாபார நிலையங்களை குத்தகை மூலம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வர்த்தகர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-56,213)



## பொன்னாலைக் கண்ணனுக்கு திங்களன்று கொடியேற்றம்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும். எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.25 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்குத் திருவடிநிலையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி ஆங்கில புதுவருட தினத்தன்று முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், இரவு 7 மணிக்கு பூந்தண்டிகை உற்சவமும் இடம்பெறும். தொடர்ந்து வருடாந்த மார்கழி பஜனை ஊர்வலம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சுகாதார நடைமுறைகளை மீறிய உணவகம் மீது சட்டநடவடிக்கை

மன்னார், டிசெ.20

மன்னார் பள்ளிமுனையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல், இயங்கிய உணவகம் மீது, பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனை சுகாதாரப் பரிசோதகர்கள் சட்டநடவடிக்கை எடுத்துள்ளனர். பள்ளிமுனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையில், நீண்ட நாள்களாக பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிவந்த உணவகம் அடையாளம் காணப்பட்டது. உணவகம் மற்றும் உணவக உரிமையாளருக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-56,213)




## இப்பிடியெல்லாம் போராட்டமா?

சொந்தக் காசிலையே சூனியம் வைக்கிறது சிலருக்குப் பிடிக்கும். அதை மாதிரி தங்கட அரசாங்கத்துக்கு எதிராவே சிலர் போராட்டமும் செய்யத் தொடங்கியிருக்கினம். ஆராவது அப்பிடித் தங்கட கட்சி ஆட்சியில இருக்கேக்க, அந்த அரசாங்கத்துக்கோ, நிர்வாகத்துக்கோ, சட்டத்துக்கோ எதிராப் போரடினவினமோ ? எண்ட கேள்வி எல்லாருக்குமே இருக்கும். ஆனால் திசைகாட்டியின்ர ஆட்சியில அதெல்லாம் நடக்கும் எண்டு காட்டியிருக்கினம். கிட்டடியில தமிழக மீனவர்கள் இஞ்ச அத்துமீறி மீன்பிடிக்கிறதுக்கு எதிரா ஒரு போராட்டம் பெரிசா நடந்தது. அந்தப் போராட்டத்தை முன்னுக்கு நிண்டு செய்விச்ச ஒருத்தர் "இனியும் உந்தத் தமிழக மீனவர்மார் அத்துமீறினால், யாழ்ப்பாணத்தில இருக்கிற இந்தியத் துணைத்தூதரகத்தை இல்லாமல் செய்வம். அது இஞ்ச இருந்தும் உருப்படியா ஒண்டும் செய்யாமல் இருக்கிறதைவிட, இல்லாமல் போறது நல்லது" எண்டெல்லாம் ஆவேசமா, அனல் தெறிக்கக் கதைச்சவர். அவர் போனமுறை எலக்சனில திசைகாட்டியில நிண்டு வாக்குக் கேட்டவர் எண்டு பிறகு தான் எல்லாருக்கும் தெரியவந்திருக்குது. அதோட இப்பவும் ஆள் திசைகாட்டிக்காகத் தான் அரசியல் வேலை செய்யிறாராம்.

அவரைமாதிரி திசைகாட்டியோட இயங்கிற கனபேர் அண்டையான் மீனவர் போராட்டத்தில முன்னுக்கு நிண்டவை. அவைதான் இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைச்சு, ஆக்களையெல்லாம் பஸ்ஸில கூட்டிக்கொண்டு வந்தவையாம். அப்பிடித் தங்கட அரசாங்கத்தின்ர காலத்தில போராட்டம் நடத்தவேண்டிய தேவை உவையளுக்கு ஏன்? தேவை இருக்கு. இப்ப உந்த மீனவர் பிரச்சினையால கடற்றொழில் அமைச்சருக்கு எதிரா இஞ்சையுள்ள மீனவர்மார் திரும்பிட்டினம். "இந்த அமைச்சர் வாயால வடை சுடுறாரே தவிர உருப்படியா ஒண்டும் செய்யிறார் இல்லை" எண்டு அவையள் பகிரங்கமாக் குற்றம் சாட்டத்தொடங்கிட்டினம். ஆனால் மீனவருக்காக அமைச்சரும் இந்தியாவோட வரிஞ்சு கட்டிக்கொண்டு சண்டைக்குப் போகேலாது. அப்பிடி மீனவர்களுக்காக இந்தியாவைப் பகைச்சால், அந்த நாடு குடுக்கிற உதவியளையெல்லாம் நிப்பாட்டிப்போடும். அதாலதான்தான் நேரடியா இந்தியாவை எதிர்க்காமல், இப்பிடி மீனவர்களைத் தூண்டிவிட்டு திசைகாட்டிக்காரர் பின்னால நிக்கினம் எண்டு கதை அடிபடுகுது.

இந்தப் போராட்டம் மட்டுமில்லை, யாழ்ப்பாணம் பழைய பூங்காவில உள்ளக விளையாட்டரங்கைக் கட்டக் கூடாது எண்டு கோர்ட்ஸில இடைக்காலத் தடை விதிச்சிருக்குது. அப்பிடிப்பட்ட நிலைமையில "எங்களுக்கு உள்ளக விளையாட்டரங்கு வேணும், அதுவும் பழைய பூங்காவிலதான் கட்டவேணும்" எண்டு கொஞ்சப்பேர் ஆர்ப்பாட்டம் செய்தவையெல்லோ. உண்மையில அந்தப் போராட்டம் நீதிமன்ற அவமதிப்பு. கோர்ட்ஸில வழக்கு நடந்துகொண்டிருக்கே, அதுவும் இடைக்காலத்தடை போட்டதுக்கு எதிரா போராடுறது பெரும் பிழை. அப்பிடிப் பிழையான ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னாலையும் திசைகாட்டிக்காரர்தான் இருக்கினம். ஏனெண்டால் இப்பிடிப் போராட்டம் நடத்தி அழுத்தம் குடுத்து, தாங்கள் எங்க அந்த உள்ளக விளையாட்டரங்கைக் கட்ட நினைச்சினமோ அங்கேயே கட்டவேணும் எண்டதுதான் அவையின்ர பிளானாம். அந்தக் கட்சியின்ர ஏரியாப் பொறுப்பாளர்மார் தங்கட வட்ஸப் குரூப்புகளிலயும், பேஸ்புக்கிலையும் அந்தப் போராட்டத்துக்கு வரச்சொல்லி அழைப்பு விட்டிருக்கினம்.அந்த ஆதாரங்களையெல்லாம் மீடியாக்காரர் சிலர் 'ஸ்கிரீன்சொட்' எடுத்துவைச்சுப் போட்டு, 'நீங்கள் தானே அந்தப் போராட்டத்துக்கு பின்னால நிண்டனியள்? ' எண்டு இளமையான எம்.பி.யிட்ட கேள்வி கேக்க,ஆள் திக்குமுக்காட்டிப் போட்டாராம். இப்பிடித் தங்கட அரசாங்கத்துக்கு எதிராவே போராடுற சாணக்கியமெல்லாம் யாழ்ப்பாணத்து திசைகாட்டி எம்.பி.மாரிட்டத்தான் இருக்கு கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

ஒரு சிறந்த சிந்தனையின் ஒளியானது, பணத்தைவிட அதிக மதிப்பினை உடையது.

–தோமஸ் ஜெபர்சன்–

## போதைப்பேயின் கோரப்பிடியில்…!


யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் ஒருவர், அளவுக்கதிகமான ஹெரோய்ன் பாவனை காரணமாக உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையால் உயிரிழப்புகள் சம்பவிப்பது இதுவொன்றும் முதல் முறையல்ல. கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன தரவாகவும், தகவலாகவுமே இது காணப்படுகின்றது. ஆனால், தற்போது பதிவாகியிருக்கும் உயிரிழப்பு வித்தியாசமானது. இது, பல்வேறுபட்ட கேள்விகளை சமூக மட்டத்திலும் -அரச கட்டமைப்பிலும் எழுப்பவே செய்கின்றது. விடயம் என்னவென்றால், ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகிப்போன அந்த குடும்பத் தலைவர், ஹெரோய்ன் தொடர்பான வழக்கொன்றுக்காகச் சிறையில் இருந்துவிட்டு வெளிவந்த மூன்றாம் நாளில், மீண்டும் ஹெரோய்னை அளவுக்கதிகமாக நுகர்ந்ததாலேயே மரணம் சம்பவித்திருக்கின்றது.

போதைப்பொருள் சார்ந்த குற்றங்களுக்காக மறுவாழ்வுக்கு உட்படுவோர் அல்லது சிறைசென்று திரும்புவோர் மீண்டும் மீண்டும் அதே குற்றங்களுக்கு ஆட்படுகின்றனர் என்பது பிரதேச - மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகள் முன்வைக்கும் பூதாகரமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், இந்தக் கருத்துகள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதையும் -ஆபத்தின் அறைகூவல் என்றும், மேற்படி குடும்பத்தலைவரின் உயிரிழப்பு கட்டியம் செய்திருக்கின்றது. சுருக்கமாகக் கூறவேண்டுமாயின், யாழ்ப்பாணத்திலும், நாடெங்கிலும் இருந்து போதைப்பொருள்கள் மீட்கப்படுகின்றனவே தவிர, அவற்றை அணுகுவதற்கு இருக்கும் முகாந்திரங்கள் அழிக்கப்படவில்லை என்பதையே அந்தக் குடும்பத்தலைவரின் உயிரிழப்பு வெளிப்படுத்துகின்றது.

மறுவாழ்வுக்கு ஒருவர் சென்றுவந்தாலும், அவருக்கு மீண்டும் போதைப்பொருள் கிடைப்பதற்கு ஏதுவான அணுகல்நிலை சமூகத்தில் உயிர்ப்புடன் இருக்கும்போது எவ்வாறு மறுவாழ்வு நடவடிக்கை வெற்றிபெறும்? போதைக்கு எதிரான நடவடிக்கைகள் எனப்படுபவை வேரில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டியவை. மாறாக, கண்ணுக்குத் தெரியும் கிளைகளை அகற்றுவதால் எந்த மாற்றமும் ஏற்படாது. போதையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களைவிடவும், போதை இளைஞர்களிடத்தில் பரவும் வேகம் அதிகரித்துள்ளது என்பது கண்கூடு. எனவே, போதைப்பொருள்களை மீட்பதுடன் பொலிஸாரின் கடமை முற்றுப்பெறக்கூடாது. மாறாக, அவை தொடர்பான அணுகலையும், பரவல் வேகத்தையும் தகர்ப்பதற்கு பொலிஸார் ஆழமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மிகத் தீவிரமான புலன் விசாரணைகள் அவசியம்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதிகள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொர்க்கபுரியாக மாற்றம்பெற்று நெடுங்காலம் ஆகிவிட்டது. சட்டங்கள் இறுக்கப்படுகின்ற போதிலும், தண்டனைகள் கடுமையாகின்ற போதிலும் மட்டுமே, இந்தப் போதைச் சீரழிவை கொஞ்சமேனும் சரிசெய்யமுடியும். எந்தவொரு நாட்டில் போதைப்பொருள் தலைவிரித்தாடுகின்றதோ அந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதே இருக்காது. இளைஞர்களை பிரதான மனித வளமாகக் கொண்டிருக்கும் இலங்கை, போதையை வீழ்த்தினால் மட்டுமே நாடாக வெற்றிபெற முடியும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# தரச்சோதனைகளில் 93 மருந்துகள் தோல்வி

Ministry of Health

**கொழும்பு, டிசெ.20**
**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 93 மருந்துகள் தரச்சோதனைகளில் தோல்வியடைந்துள்ளன என்று சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்தத் தரங்குறைந்த மருந்துகளில் பெரும்பாலானவை இந்தியாவிலும், உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய மருந்துகள் சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்தவையாகும். தரமற்றவை என அடையாளம் காணப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டுள்ளன என்றும், சில மருந்துகளின் விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2017ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்தமாக 600 மருந்துகள் தரச்சோதனையில் தோல்வியடைந்துள்ளன. (எ-இ)

## நிவாரண நிதியத்துக்கு 4,286 மில்.

கொழும்பு, டிசெ.20
டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் 'Rebuilding Sri Lanka' நிதியத்துக்கு இதுவரை 4 ஆயிரத்து 286 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளது என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.
4,263 மில்லியன் ரூபா உள்நாட்டு வர்த்தகர்கள் ஊடாகக் கிடைத்துள்ளது என்றும், எஞ்சிய தொகை வெளிநாடுகளில் இருந்து நேரடியாக வைப்பிலிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.20
இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 93 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா மேம்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.
கடந்த முதலாம் திகதி முதல் 14ஆம் திகதிவரை 93 ஆயிரத்து 31 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர். ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 7.6 சதவீதமான விவசாய நிலங்கள் பாதிப்பு

இலங்கையைத் தாக்கிய அண்மைய கடும் சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக நாட்டின் மொத்த விவசாய நிலங்களில் 7.6 சதவீதமான (1,75,000 ஹெக்டேயர்) நிலப்பரப்பு முற்றாகச் சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுமார் 1.40 இலட்சம் முதல் 1.50 இலட்சம் ஹெக்டேயர் நெல் வயல்கள் அழிந்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## ரூ.2 பில்லியன் பரிமாற்றத்தை எட்டியது GovPay




இலங்கையின் அரச டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல் தளமான Gov Pay, 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 2 பில்லியன் ரூபா மொத்த கொடுக்கல் வாங்கல் பெறுமதியைத் தாண்டியுள்ளது. இதில் இறுதி ஒரு பில்லியன் ரூபாவானது வெறும் நாள்கள் போன்ற குறுகிய காலப்பகுதிக்குள் எட்டப்பட்டுள்ளது என்று டிஜிற்றல் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது 215 அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான 3 ஆயிரத்து 372 அரசசேவைகளுக்காக இந்தத் தளத்தின் ஊடாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். (எ-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை – மார்கழி 06
21.12.2025
சுபநேரம் : 09.24 - 10.54
ராகுகாலம் : 04.54 - 06.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்

(ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத் தங்கள் நீங்கும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறை வேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளை கள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.


**விருச்சிகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** தன்னம்பிக்கையுடனும் தைரியத்து டனும் செயற்படுவீர்கள். தொடங்கும் காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணை யால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** இன்று நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக் கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.



# புதுக்குடியிருப்பு கள்ளியடியில் 1,000 ஏக்கர் நெற்செய்கை அழிவு

## விவரங்களைத் திரட்டும் அதிகாரி

**முல்லைத்தீவு, டிசெ.20**

**டித்வா புயல் மற்றும் தொடர் மழையால், புதுக்குடியிருப்பு கள்ளியடி வயல் வெளியில், சுமார் ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது. இதுதொடர்பான விவரங்கள் கமநலசேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகத்தரால் திரட்டப்படுகின்றன.**

வெள்ளப்பெருக்குக் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்து ஐயன்கட்டுக்குளத்தின் வான்கத வுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. குளத்தின் நீர் பேராறு, கள்ளியடி ஊடாக நந்திக்கடலைச் சென்ற டைகின்றது. இதனால் புதுக்குடி யிருப்பு கமநலசேவைக்கு உட் பட்ட கள்ளியடி வயல் வெளியில், சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் வரை நெற்செய்கை பாதிக்கப்பட் டுள்ளது. கிட்டத்தட்ட ஆயிரம் ஏக் கர் வயல் வெள்ளத்தில் மூழ்கியுள் ளது.

இந்தப் பகுதிகளில் நெற்செய்கை ஆரம்பித்து 3 மாதங்கள் கடந் துள்ளன. குடலைப்பருவத்தில் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. எனவே பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கான இழப் பீட்டை அரசாங்கம் விரைந்து பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-19)

# கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு நடத்தும் 'பேரிடரை எதிர் கொள்ளல், நல்லூரில் வெள்ளம்' எனும் தொனிப்பொருளிலான கருத்தமர்வு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணியிலி ருந்து பி.ப.12.30 மணிவரை நடைபெறவுள் ளது.

யாழ்.விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் திருமதி மைதிலி ரவீஸ் வரன் தலைமையுரையையும், யாழ்.விஞ் ஞான சங்கத் தலைவர் டாக்டர் பே.அமல் டினேஷ் கூஞ்ஞ தொடக்கவுரையையும், யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா 'பருவ நிலை மாற்றமும் வெள்ளப்பெருக்கும்'எனும் தலைப்பில் கருப்பொருள் உரையையும் நிகழ்த்துவர்.

யாழ்.பல்கலைக்கழக முன்னைநாள் துணை வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பால சுந்தரம்பிள்ளையின் வழிப்படுத்தலில் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் க.கஜபதி , யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் அல்பிரட் அன்ரனிராஜன், யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் பிரதீபா விபுலன், வடக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகா லமைப்புச்சபை உதவிப் பொதுமுகாமையா ளரும் பொறியியலாளருமான ஏ.ஜெகதீசன், யாழ்.மாநகராட்சி மன்றத் தலைமைப் பொறி யியலாளர் இ.சுரேஸ்குமார், யாழ். நீர்ப்பாசனப் பொறியியலாளர் கு.சுஜீவன், நல்லூர்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இ.சிவகரன் ஆகியோர் கருத்து ரைகளையும், யாழ்.பல்கலைக்கழக மெய்யி யல் துறைத் தலைவர் தொகுப்புரையையும் வழங்குவர். (எ-41-59)

# விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின்கீழ் காணப்படும் உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதவி வெற்றிடங்கள் திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறையின்கீழ் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை WWW.NP.GOV.LK எனும் இணையத்தளத்தில் "EXAM AND RECRUITMENT ADVERTISEMENT" எனும் பகுதியின் ஊடா கப் பெறமுடியும் என மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள் ளார். (எ-41-66)



தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாவற்குழி மேற்கு, நாவற்குழி தெற்கு மற்றும் மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள பெற்றோருக்கான கிராம மட் டத்தில் சிறுவர் பாதுகாப்பு, பெண்களுக்கான வலுவூட்டல் தொடர்பான கருத்தரங்கு நாவற்குழி மகாவித்தியாலயத் தில் அண்மையில் நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அலகினால் நடத்தப்பட்ட கருத்த ரங்கில் வளவாளராக உளநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் கலந்துகொண்டார். (எ-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தால் தரம் குறைந்த மருந்து இறக்குமதி

## அஜித் பி பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, டிசெ.20**

**இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை வெளிப்படுத்துமாறு பல கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்தோம். ஆனால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் தற்போது பலவந்தமாக மருந்துகளை இறக்குமதி செய்து, நோயாளிகள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை, வழக்கு விசாரணைகள் நடைபெறுவதால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியாது என்று கூறினார்கள். பின்னர் அந்த உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் அதன் உள்ளடக்கங்கள் என்ன என்பது இதுவரையிலும் யாருக்கும் தெரியாது.

அதனால் தற்போது தரத்தில் குறைந்த சர்வதேச தர நியமங்களுக்கு உட்படாத மருந்துகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். இதற்கு முன்னர் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட போது, அவற்றின் விலைகள் மற்றும் தரம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

ஆனால் இன்று விலையை பற்றி மாத்திரம் கவனம் செலுத்தி தரத்தில் குறைவான மருந்துகளை இறக்குமதி செய்கின்றனர். தரக்குறைவான மருந்து பாவனையாளர்கள் நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் தரமான மருந்துகள் உள்ளன. ஆனால் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய வேண்டும் என்பதற்காக தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் காரணமாக எமக்குத் தெரிவொன்று இல்லாது போயுள்ளது. அவர்கள் வழங்கும் மருந்தை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது -என்றார். (எ-இ)



# அரச திணைக்களங்களின் பிடியிலுள்ள காணிகளை விடுப்பதற்குப் பேச்சுகள்!

## *யாழ். காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்*

யாழ்ப்பாணம்.டிசெ.20

யாழ்.மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதென யாழ்.மாவட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போதே ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியான காணிப் பயன்பாட்டு விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன்படி யாழ்.மாவட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட அரச காணிகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறுமாத காலம் தொடக்கம் ஒரு வருடம் வரை பயன்படுத்தப்படாத நிலையிலிருந்தால் அக் காணிகளுக்கு அனுமதியை ரத்துச் செய்யுமாறு யாழ்.மாவட்டச் செயலரால் தெரிவிக்கப்பட்டது.

காணிகள் தொடர்பாகப் பிரதேச மட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பிரதேசமட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுவில் அனுமதியைப் பெற்ற பின்னர் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுப் பின்னர் மாவட்டக் காணிப் பயன்பாட்டுக் குழுவில் சமர்ப்பிக்க வேண்டும். பிரதேச செயலாளர் பிரிவுகளில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்குக் காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்டச் செயலர் கூறினார் . (ச-66,27)



# சொந்த நிதியைப் பயன்படுத்தி வீதி விளக்குகளைப் பொருத்துக!

## *மானிப்பாய் தவிசாளர் தன்னிச்சை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், டிசெ.20

சபையின் நிதியில் கொள்வனவு செய்த வீதி விளக்குகளை பொருத்துவதற்கான சம்பளத்துக்கு ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது சொந்த நிதியைப் பயன்படுத்தவேண்டும் என்று மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் ஜெசீதன் தெரிவித்துள்ளார் என்று உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான வினோத் தனு தெரிவிக்கையில்-

பிரதேசசபையின் நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தலா 10 வீதி விளக்குகள் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்த வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு ஒவ்வொரு உறுப்பினர்களும், ஒரு வீதி விளக்குக்கு 300 ரூபா வீதம் தமது சொந்த பணத்தில் இருந்து வழங்கவேண்டும் என்று தவிசாளரால் கூறப்பட்டது. நாங்களும் வேறு வழியின்றி அவ்வாறு ஒரு வீதி விளக்கு 300 ரூபா வீதம் 10 வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு மொத்தமாக 3000 ரூபாவை வழங்கினோம்.

அந்தக் கொடுப்பனவு வழங்கமுடியாது என்று கூறுகின்ற உறுப்பினர்களின் வட்டாரத்தில் வீதி விளக்குகள் பொருத்தப்படாது என்ற தவிசாளர் கூறிய நிலையில் வேறு வழியின்றி எமது சொந்த நிதியில் இருந்து அந்தக் கொடுப்பனவை வழங்கினோம். வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்யும்போது, அந்த வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு சபையில் இருந்து நிதி ஒதுக்கியிருக்கலாம் அல்லவா? எதிர்காலத்தில் இது குறித்து சரியான தீர்மானம் எடுக்கவேண்டும் - என்றார். இது குறித்து ஏனைய உறுப்பினர்களும் நாமும் எமது சொந்த நிதியில் இருந்து கொடுப்பனவை வழங்கினோம் - என்றனர். [illegible]

# மட்டக்களப்பு கல்லடிப் பாலம்; ஐரோப்பியக் குழு ஆராய்வு

மட்டக்களப்பு, டிசெ.20

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் ஐரோப்பிய தொழில்நுட்ப நிபுணர்கள் நேற்று முன்தினம் ஆய்வுகளை மேற்கொண்டனர். நாடளாவிய ரீதியில் வெள்ள அனர்த்தினால் பாதிக்கப்பட்ட பிரதான பாலங்களை ஆய்வு செய்வதற்கு நப்லஸ் பல்கலைக்க பேராசிரியர் லூயி டி சார்நோ அடங்கலான ஐரோப்பிய ஒன்றிய தொழில்நுட்ப நிபுணர் குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் போது நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கவுள்ளனர். (ச-இ)



# பிள்ளையானின் சகா மட்டக்களப்பில் கைது

கொழும்பு, டிசெ.20

பிள்ளையானின் சகாவான அஜித் என்பவர் மட்டக்களப்பு கொண்டையங்கேணியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுக் கொழும்பில் இருந்து சென்ற குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தனை கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி கைதுசெய்தனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையானிடம் மேற்கொண்டுவரும் விசாரணையின் அடிப்படையில் அந்தக் கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் பிள்ளையானின் சகாக்கள் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

20.12.2025 சனிக்கிழமை

# யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊழியர்களுக்கு பயிலரங்கு

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக ஊழியர்களுக்கான திறன்விருத்தி முழுநாள் பயிலரங்கு, பௌதீகவியல் கூட்ட அரங்கத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் யசோதன் தலைமையில் நடைபெற்ற பயிலரங்கை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா ஆரம்பித்து வைத்தார்.

நிர்வாக ஊழியர்களுக்கான தலைமைத்துவத் திறன், குழுப் பண்பாடு மற்றும் மனித உறவுகள், நேர்மறைச் சிந்தனைகள் மற்றும் பணித்திறன் வளர்ப்பு, நேர மேலாண்மை, உற்பத்தித் திறனை உயர்த்தும் உத்திகள், தொடர்பு மற்றும் ஒத்துழைப்புத் திறன், பங்கேற்பு அடிப்படையிலான பணிமுறைகள், பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தொடர்புடைய அரச விதிமுறைகள், பொறுப்புணர்வு மற்றும் ஒழுங்குமுறைப் பண்பாடு, வேலைச்சூழலில் கணக்கெடுப்பு மற்றும் வெளிப்படை, பணி விதிமுறைகள் மற்றும் சட்டங்கள், பணிப் பாதுகாப்பு, பணியிட முறையீடுகள் மற்றும் தீர்வுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஊழியர்களுக்கு விளக்கமளிக் கப்பட்டன.

(சு-26.27)


## ஆங்கில சிங்கள வகுப்புகள்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

திகதி : 20.12.2025 (சனிக்கிழமை)

நேரம் : 08.30 am , 03.30pm

- தரம் - 6 இலிருந்து G.C.E O/L, G.C.E A/L வரையான வகுப்புக்கள் (School books with grammar)
- இலக்கணத்துடனான பேச்சு ஆங்கிலம் for the primary Classes grades 3 to 5.
- பாடசாலை விலகியோருக்கான மூன்றுமாத பாடநெறி.
- பல அரச பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பித்த அனுபவத்தைக் கொண்ட ஆசிரியரின் கற்பித்தல்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தொடர்பு இல: 075 118 7131

(CR/46723) J-1


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அருள்ராஜ் சுவேதன்**

திதி: மார்கழி பிரதமை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.10.2001 | 31.12.2024 |

எம் வாழ்வின் பொருளுணர்த்தி

வந்துதித்த தலைமகனே!

கனவுகளைப் பொய்யாக்கி

உனைக் காலன் கவர்ந்த ஓராண்டின்று.

இனி மூச்சுள்ள நாள்வரைக்கும்

உன் நினைவுகளில் நீளும் காலம்.


டச்சு வீதி
அளவெட்டி.

(CS/60222) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 11 . 1977



மறைவு
17 . 12 . 2025

**கந்தசாமி கமலேந்திரன் (தயான்)**

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் லண்டனை (Mitcham) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலேந்திரன் (தயான்) 17.12.2025 புதன்கிழமை லண்டனில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - யசோதரஞ்சினி தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரியின் (சுதா) அன்புக் கணவரும், டினோஜா, சஹானா, திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜேந்திரன் (UK), புஷ்பாஞ்சலி (இலங்கை), கபிலேந்திரன் (இலங்கை), கீதாஞ்சலி (இலங்கை), நரேந்திரன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயமலர், சிறீதரன், பிரியதர்ஷினி, சிறீஸ்கந்தராசா, பமிலா, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வித்யா, சம்ஷிகா, ஹரீஷ், லக்ஸன், கிருசாந்தி, ஜசிகா, டில்ஷாந்த், ஆகியோரின் பாசமிகு மாமாவும், கௌதம், கபில்தேவ், கிருத்திகா, சஞ்சய், அனுஷன், டிரோஜன், பிரீத்தி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், துவாரகன், ஹரிணி, லக்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், யுவன், ரிஷிகா, ஷஸ்வின், சிறீஜா, ரித்விக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை The memon centre 3 weir road london எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.


**தகவல்:**

க.கபிலேந்திரன் (ராஜா) - 077 956 9920
யோ. சிறீதரன் (கண்ணன்) - 075 424 8709
மு.சிறீஸ்கந்தராசா (சிறீ) - 076 106 4595
க.கபில் - 0044 7428 932476
க.நரேன் - 0044 [illegible]
ந.தாஸ் - 0044 [illegible]

(CS 60217) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 08 . 1943



மறைவு
17 . 12 . 2025

**நல்லதம்பி பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற சாரதி கோண்டாவில் சாலை - C.T.B)

தொம்பை வீதி, உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (17.12.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்புச் சகோதரனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நரேஸ் மற்றும் றமேஸ், சுரேஸ், பாரத்தீபன், பிரதீபன் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரமிலா, ஜெயமதி, தாரணி, கவிதா, நிரோஜினி ஆகியோரின் மாமனாரும், தனுஷன், மிதுஷன், சாருஜன், சங்கஜா, கோசயன், கஜீவன், கரிசாந், கார்த்திகன், நேகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு.

குடும்பத்தினர்
077 798 9115

(CS/30920) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பலாலி கிழக்கு விரப்பபழை வீதி, நீண்ட காலத்தின் பின்னர் தார் ஊற்றிச் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

(சு-17)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டுக் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 90 அரச உத்தியோகத்தர்களுக்கான நிவாரணப் பொதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. வவுனியா வர்த்தகர்கள் மற்றும் மக்களின் பங்களிப்பில் இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(எ-41-113)

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 11 . 1938

மறைவு 16 . 12 . 2025

## பரமானந்தன் சிதம்பரப்பிள்ளை

மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட பரமானந்தன் சிதம்பரப்பிள்ளை அவர்கள் 16.12.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமலிங்கம், சோமேஸ்வரி, காலஞ்சென்ற நித்தியானந்தன், சிவானந்தன், கிருஷ்ணானந்தன், சற்குணேஸ்வரி, குமரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 30909) E

# நல்லூர் பிரதேச சபை
# கொக்குவில்
## 2026ம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை, 01.01.2026ம் திகதி தொடக்கம் 31.12.2026ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 22.12.2025 - 29.12.2025 திகதி பி.ப 3.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 29.12.2025 திகதி பி.ப 03.30 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 29.12.2025 திகதி பி.ப 03.30மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

**2026ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2026 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 1,500.00 | 115,000.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | கோண்டாவில் ஸ்ரேசனடி கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,500.00 | 519,000.00 |

கேள்வி அறிவித்தல் தொடர்பான நிபந்தனைகளை 17.10.2025ந் திகதிய தினக்குரல், உதயன் பத்திரிகைகளில் பார்வையிடமுடியும் அத்துடன் அலுவலக நாட்களில் காலை 8.30 - மாலை 4.15 மணி வரை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**
**20.12.2025**

(CR 46737) E

## என் அம்மாவின் ஓராண்டு நினைவு நாள் செய்தி
### மகனின் இதயத்திலிருந்து



அன்னை மடியில் 13 . 10 . 1947

சிவன் அடியில் 02 . 12 . 2024

அம்மா...

ஒரு வருடம் ஆனாலும், நீங்கள் இல்லாத ஒவ்வொரு நாளும் என் உயிரின் ஒரு துண்டு தகர்ந்து விழுவதுபோலவே இருக்கிறது.
உலகத்துக்கு இது 365 நாட்கள் மட்டும்தான், ஆனால் எனக்கு, அது 365 காயங்கள்.

நீங்கள் என்னை அழைத்த குரல்...
நான் தளர்ந்தபோது உங்கள் கைத் தொட்ட ஆறுதல் எதுவும் இன்று இல்லை.
நீங்கள் இல்லாத இந்த வீட்டில், எல்லா மூலைகளிலும் உங்கள் நினைவுகள் மட்டும் நின்று கொண்டு என்னை பார்த்துக்கொண்டிருக்கின்றன.

அம்மா, நீங்கள் போனதற்குப் பிறகு என் வாழ்க்கை ஓடிக் கொண்டே இருக்கிறது, ஆனால் என் மனசு அங்கேயே நின்றுவிட்டது -
உங்களைத் தழுவிய அந்த கடைசி தருணத்தில்.

நான் தினமும் உங்களை நினைத்து பேசுகிறேன்,
ஆனால் பதில் வரவில்லை. அது என் இதயத்தை உடைக்கிறது. ஆனால் ஒரே ஆறுதல் - உங்கள் அன்பு இன்னும் என்னை பாதுகாத்து கொண்டே இருக்கிறது என்ற உணர்வு.

**அம்மா...**
**நீங்கள் என் இதயத்தில் மட்டுமல்ல,**
**என் மூச்சுக்கும் இடையே வாழ்கிறீர்கள். என்றும் என்றும்...**
**உங்கள் மகனின் அன்பில் மூடப்பட்டவளாக.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர். சின்னத்துரை விமலநாதன்

தோற்றம் - [illegible] மறைவு - [illegible]

நிழலாக இருந்த உங்களை
நிஜமாக பிரித்துவிட்டான் ஆண்டவன்
உங்கள் உதவிய நல்ல மனதால்
உன் ஆயுளை அவன்
நிம்மதியாக எடுத்துவிட்டான்
அழைத்த உடன் எல்லாம்
அருகில் வரும் நீங்கள்
எமை விட்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் - எங்கள்
மனம் விட்டு என்றும் செல்லாது.

அம்பனை, தெல்லிப்பளை
மகாஜனா கல்லூரிக்கு அருகில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை, தென்னை கூ.சங்கங்கள் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

**வடக்கு மாகாணத்தில் இயங்கி வரும் பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் சவால்களைக் களைந்து அவற்றை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

போத்தல்கள் அடைப்புக்கான பாதுகாப்பு வரி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளால் அமைச்சரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில்
நிதியமைச்சருடன் கலந்துரையாடி பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு வரி தொடர்பாக தற்காலிக தீர்வொன்றைக் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் எதிர்காலத்தில் இந்தச் சங்கங்கள் எதிர்நோக்கும் ஏனைய சவால்கள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கப்படும். பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கான தேவையான உதவிகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டதுடன், வவுனியா மாவட்ட சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் பங்கேற்றனர். (ச)

# மீனவர்கள், விவசாயிகளுக்கு உடன் இழப்பீடு வழங்குங்கள்

## கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ.20

வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கான இழப்பீடுகள் உடனடியாக வழங்குவதற்கும் பண்ணைகளில் ஏற்பட்ட அழிவுகளுக்கான இழப்பீட்டை கிராம சேவையாளர்களின் உறுதிப்படுத்தலோடு வழங்குவதற்கும் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த வருடத்துக்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி மண்டபத்தில் நடைபெற்றபோதே இதுதொடர்பில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், மாவட்ட செயலாளர் திரு முரளிதரன், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-27,113)


## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 06 . 1950

மறைவு 19 . 12 . 2025

**திருமதி செல்வராசா பூமணிதேவி (மணி)**

மூளாய் கிழக்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா பூமணிதேவி அவர்கள் நேற்று (19.12.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி தாமோதரம்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நல்லத்தம்பி செல்வராசாவின் அன்பு மனைவியும், கொல்லங்களட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சரஸ்வதிதேவி மற்றும் கந்தராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஞ்சயன், சுவேதா, சஞ்சிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், கு.கண்ணதாசன், ச.கோகுலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், க.கிஷான், கோ.கிசேபன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்.
076 3026 482
077 2541 690

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 11 . 1944

மறைவு 17 . 12 . 2025

**(சாஸ்த்திரியார்) நடராசா இராசம்மா**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த சாஸ்த்திரியார் நடராசா இராசம்மா அவர்கள் கடந்த 17.12.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - நடராசா (சாஸ்த்திரியார்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், ந.அருளாளன் (USA), பு.சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தாரணி அருளாளன், தங்கத்துரை புவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பு.குகாயினி, பு.ஹரிஸ்ராம், பு.சிவாஜினி, அ.அனாகன் (USA), அ.அனாஜினி (USA), அ.அனாளன் (USA) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.
077 667 9506

(CR 46710) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியிடம் தமிழ்த் தேசியப் பேரவையினர் வலியுறுத்தியுள்ளனர்.
ஜனாதிபதி அநுர தலைமையிலான ஸ்ரீலங்கா அரசாங்கம் உருவாக்கிவரும் அரசியலமைப்புத் தொடர்பில், தமிழகத் தலைவர்கள் தலையிட வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பேரவையினர் வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில், தமிழக முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்து ஏற்கனவே மனு வழங்கப்பட்ட நிலையிலேயே, அதன் தொடர்ச்சியாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியையும் பேரவையினர் சந்தித்துள்ளனர்.
தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் தொடர்பிலும் இதன்போது அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். எடப்பாடி பழனிச்சாமியுடனான சந்திப்பைத் தொடர்ந்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானையும் தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். (அ-ம-26-66-100)

## தவறான...

பழைய பூங்கா பகுதியில் 12 பரப்பளவுக் காணியைக் கையகப்படுத்தி, அதில் 370 மில்லியன் ரூபா செலவில் உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளுக்காக கடந்த 23ஆம் திகதியன்று அடிக்கல்லும் நடப்பட்டது.
எனினும், யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நூற்றாண்டு காலப் பழமையான மரங்கள் காணப்படும் நிலையில் அவற்றை அழித்து உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக் கூடாது என வலியுறுத்தி கிருஷ்ணவேணி சிறிதரன் என்பவர் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாகி பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் வகையில் கட்டாணை பெற்றிருந்தார்.
14 நாள்களைக் கொண்ட கட்டாணைக்காலம் நேற்று நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, கட்டாணை உத்தரவை நீடிப்பதற்கு நீதிமன்றம் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் வழங்கியுள்ள கட்டளையில் உள்ளதாவது:
வழக்கானது தர்ம நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ், இரண்டுக்கும் குறையாத பயனாளிகள் சட்டமா அதிபரின் கையொப்பத்தைப் பெற்றே வழக்கைத் தாக்கல் செய்திருக்க வேண்டும். இந்தக் கட்டாய தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாமலேயே கட்டாணை பெறப்பட்டுள்ளது. முகத்தோற்ற அளவில் வழக்கொன்று இருப்பதாக மன்று திருப்தியடைந்து கட்டாணையை வழங்கியுள்ள போதிலும், வழக்கேட்டை முழுமையாக ஆராய்ந்ததில், வழக்காளிக்கு வழக்கொன்று உள்ளதாக மன்று திருப்தியடைய முடியாத நிலை காணப்படுகின்றது. வழக்காளிக்கு வழக்கைக் கொண்டு நடத்துவதற்கு சட்ட அந்தஸ்து உள்ளதா என நிச்சயமற்ற நிலை நிலவுவதால் கட்டாணையை நீடிக்க வேண்டிய தேவை அற்றுப்போயுள்ளது - என்றவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ-ம-26)

## சூரிய...

சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா கருவேப்பன்குளம் பகுதியைச் சேர்ந்த சுரேந்தினி (வயது- 35) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
உயிரிழந்த பெண்ணும், அவருடைய கணவரும் குடும்பத் தகராறு காரணமாக, பிரிந்து வாழ்ந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை குறித்த குடும்பத்தலைவர் மனைவியின் வீட்டுக்குச் சென்று அவருடன் உரையாடியுள்ளார். இரவு 10 மணியளவில் வீட்டுக்குள் இருந்து, பெண்ணின் அலறல் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து, ஊர் மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
இதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அந்தப் பெண்ணின் கணவர் தனது கழுத்திலும் கத்தியால் குத்திக் காயத்தை ஏற்படுத்தியுள்ளார். தாக்குதல்தாரியை மடக்கிப் பிடிப்பதற்கு பொலிஸார் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டதுடன், வானத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடும் நடத்தியுள்ளனர்.
நீண்ட முயற்சியின் பின்னர், சந்தேகநபர் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## போர்க்குற்ற...

பிரிட்டன் பாராளுமன்றத்தில், வெளிவிவகார அமைச்சகத் தெரிவுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பிரிட்டனின் நடவடிக்கை என்ன? என பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் வினவியுள்ளார்.
இதற்குப் பதிலாகவே, 'இலங்கையின் போர்க்குற்றவாளிகள் மீது எந்த விட்டுக்கொடுப்பும் இருக்காது' என்று அமைச்சர் ஜெவட் கூப்பர் கூறியுள்ளார். 'போர்க்குற்றவாளிகள் மீதான தடை எந்தத் தளர்வும் இல்லாமல் தொடர்ச்சியாகப் பேணப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், இலங்கை தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 2026ஆம் ஆண்டின் முற்பகுதியில், இலங்கைக்கு எதிராக சில கடுமையான தீர்மானங்களை பிரிட்டன் மேற்கொள்ளும் என நம்பப்படுகின்ற பின்னணியிலேயே இந்தத் தகவல்கள் வெளிவந்துள்ளன.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறிய நிலையில், இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கு பிரிட்டன் தலைமைத்துவம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வீடொன்றில்...

வடமராட்சி புலோலி பகுதியில் உள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 182 கிலோ கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நெல்லியடி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே, மேற்படி கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், அவற்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகளைத் தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.
(அ-ம-100)

## டித்வா...

தார்.
டித்வா புயலால் ஏற்பட்ட அழிவுகளை எதிர்கொள்வதற்கான நிதியை விடுவிக்கும் குறைநிரப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி அநுர இதில் கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போதே, டித்வா புயலால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் உலக வங்கி மேற்கொண்ட முதற்கட்ட மதிப்பீட்டு அறிக்கை நாளைமறுதினம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.
இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் தொடர்பில் மதிப்பீடு செய்து, இழப்பு தொடர்பான அறிக்கையை வழங்குமாறு உலக வங்கியிடம் இலங்கை கோரியிருந்தது. உலக வங்கியின் நிபுணர்கள் குழுவினர், இது தொடர்பான பணிகளில் கடந்த இரு வாரங்களாக ஈடுபட்டு வந்தனர். அந்த அறிக்கையே ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.
எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்படும் அறிக்கை முழுமையான மதிப்பாய்வு அறிக்கையாக அமையாது. இறுதி மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கு, மூன்று மாதங்கள் வரை காத்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ம-44)

## நாட்டில்...

ரிக்கை விடுத்துள்ளார்.
இடர்கால நிதிவிடுவிப்புத் தொடர்பான குறை நிரப்புப் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் பட்டினியை எதிர்கொள்ள நேரிடும் என்று உலக உணவு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இந்த விடயம் தொடர்பில் கூடுதலான அவதானம் செலுத்தப்பட வேண்டும்.
பேரிடரால் விவசாயப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வயல் நிலங்களை மீட்கவும், விவசாய நடவடிக்கையை முன்னெடுப்பதற்குரிய நிதியை விடுவிக்கவும் இன்னமும் முறையான பொறிமுறை உருவாக்கப்படவில்லை. எனவே, துரிதமாகச் செயற்படுமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.
நவம்பர் மாதம் 26ஆம் திகதிவரை அரசாங்கம் உறக்க நிலையிலேயே இருந்தது. நவம்பர் மாதம் 27ஆம் திகதிதான் இடர் முகாமைத்துவக் கூட்டம் கூட்டப்பட்டது- என்றார்.
(அ-ம-44)

## குறைநிரப்புப்...

பிரேரணை பிரதமர் ஹரிணி அமரசூரியவால் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
பிரேரணை தொடர்பான விவாதங்கள் நேற்றுமுன்தினமும், நேற்றும் இடம்பெற்றன. விவாதத்தின் நிறைவில் வாக்கெடுப்பு இல்லாமல் குறைநிரப்புப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது. (அ-ம-44)

## பேராசிரியர்களாக...

ளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல்துறைசிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி சிவராஜா ராஜ்உமேஸ் ஆகியோர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய பேராசிரியர்களாக பதவியுயர்வு செய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், திறந்த விளம்பரப்படுத்தல் அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ நிபுணர் உருத்திரபசுபதி மயூரதனும் பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இதன்போதே, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் இசையியல் பேராசிரியராகவும், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவராஜா ராஜ்உமேஸ் சந்தைப்படுத்தல் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றனர்.
அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் சட்ட மருத்துவ பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சட்ட மருத்துவத்துறைக்குச் சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டமை இதுவே முதல்முறையாகும். (அ-ம-66-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுடன்...

ரணில் விக்கிரமசிங்க அனுபவம் மிக்க தலைவர். அவர் பதவிவிலக வேண்டியதில்லை. அவருடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க அனுபவம்மிக்க தலைவர். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டவர். அவர் பதவி விலகுவதை நாம் விரும்பவில்லை. அனைவரும் இணைந்து செல்ல வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எமது நாட்டைவழிநடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம் அவசியம். அவர் ஆலோசகராகவேனும் பதவியில் தொடர வேண்டும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்குத் தயார் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றிணைவதற்கு தனது தலைமைப்பதவி தடையாக இருக்கின்றது என்றால், அதைத் துறப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)



## காரைநகர் பிரதேசசபை பாதீடு நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ.20

காரைநகர் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு மேலதிக ஆறு வாக்குகளால் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. தவிசாளர் கோவிந்தராஜனால் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டபோது பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் பாதீடு பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது பாதீட்டுக்கு ஆதரவாக 8 உறுப்பினர்களும் எதிராக 2 உறுப்பினர்களும் வாக்களித்த நிலையில் மேலதிக ஆறு வாக்குகளால் பாதீடு நிறைவேற்றப்பட்டது.

சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் இருவர், தமிழ் மக்கள் கூட்டணி உறுப்பினர்கள் இருவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் இருவர், இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் என எட்டுப்பேர் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமுகமளிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இருவர் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர். (ச-27)



## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்குத் தீவனம்!

கிளிநொச்சி,டிசெ.20

வடக்கு மாகாணத்தில், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களுக்கு, இரு வாரங்களுக்குத் தேவையான தீவனம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சின் நிதியுதவியில், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்களுக்கு தீவனம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் கிளிநொச்சி கண்டாவளை கால்நடை மருத்துவ அலுவலகத்துக்குட்பட்ட உள்ளக மற்றும் அரை உள்ளக மாடு வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் 160 பேருக்கு, தலா 50 கிலோகிராம் தீவனம் வழங்கப்பட்டுள்ளது. (க-113)

## அனர்த்தத்தின்போதும் குவியும் சுற்றுலாவிகள்

டிசெம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 90,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் இந்திய நாட்டவர்கள் . அவர்களின் எண்ணிக்கை 21,156 ஆகும்.

இதற்கு மேலதிகமாக ரஷ்யா, பிரித்தானியா, ஜெர்மனி, சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## டச்சு வீதி புனரமைப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.20

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட நகர்வட்டாரத்தில் டச்சு வீதியின் புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

டச்சு வீதியின் புளியடிச் சந்தியில், வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நின்ற பகுதி நகரசபையால் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பப் பணிகளை நகர சபை உபதவிசாளர் ஞா.கிஷோர், உறுப்பினர் மு.கோகுல்றாஜ் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர். உபதவிசாளர் ஞா.கிஷோரின் முயற்சியில், இடர் புனரமைப்பு நிதியில் இருந்து இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது. (க-27,28)



## கலைவிழாவும்,பட்டமளிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.20

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன்விருத்தி மைய வருடாந்த கலைவிழாவும், பட்டமளிப்பும் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

நூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய, கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சஞ்ஜீவன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஆசிரியர்களின் விசேட அரங்கப்பயிற்சியுடன் கூடிய மாணவர்களின் கலைநிகழ்வுகள்இடம்பெற்றன. கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும்வழங்கப்பட்டன. (க)






எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

**பரிபூரணம்**

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஈ - சன்ஸ் அந்தியகால சேவை

இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2695 / 0774290613

**வேலையாட்கள் தேவை**

**AC Technicians**

**(AC திருத்துபவர்கள்) தேவை.**

முன்னனுபவம் உள்ளவர்கள் / முன்னனுபவம் அற்றவர்கள்

தொடர்பு: 076 149 7617

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Dishwash (பாத்திரம் கழுவுபவர்கள்)
- Security (பாதுகாப்பு உத்தியோகத்தர்)
- Waitress (உணவு பரிமாறுபவர்கள்)
- Kitchin Helpers (சமையல் உதவியாளர்)
- Bill Counter Work
- Office Staff (A/L 3 Pass Computer and Age sbove 35)
- House Keeping (பெண்)
- Heavy Vehicle Driver

தொடர்புகளுக்கு:

076 077 1020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.